**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு**

**சிதம்பரம் பொன்னம்பலம் மற்றும் ஆனந்த நடராஜர் - விளக்கம்:**

சிதம்பரம் நடராஜர் கோயில் பஞ்சபூத ஸ்தலங்களில் ஆகாச தத்வ ஸ்தலம். மெய்யுணர்வின் முழுமொத்த உருவகமே கூத்த பிரான் ஆவார். அவர் கோயில் கொண்டுள்ள மூலஸ்தானம் "**கனக சபை**" எனப்படும். கனகம் என்றால் தங்கம். கால காலமாக இச்சபையின் கூரையை தூய பொன்னால் தான் மெழுகுகிறார்கள்.ஏன்? அது ஏன் மிக உயர்ந்த விலை மிக்க தங்கமே பயன்படுத்தப்படுகிறது. மற்ற கோயில்களிலும் மூலஸ்தான விமானமும் கூரைகளும் பொன்னால் ஏன் மூடப்படுகின்றன?

தங்கம் என்பது கிடைப்பதற்கு மிகவும் அரிதானது. அதைப்போல் நமக்குள் இருக்கும் மெய்யுணர்வை முழுமையாக உணர்வது மிகவும் அரிது. முதலில் மெய்யுணர்வைப் பற்றிய அடிப்படை அறிவைப் பெறுவதே கடினம். அதற்கு உரிய குரு அல்லது வழிகாட்டி அவசியம்.

கனகசபை என்பது மனித உடம்பின் உருவகமே. கனகசபையின் கூரையில் 24000 பொன் ஓடுகள் உள்ளன. அவை ஒருநாளில் நாம் விடும் சுவாசத்தின் எண்ணிக்கையே ஆகும். சுவாசம் விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

அடுத்து இந்த ஓடுகள் 72000 ஆணிகளால் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டு உள்ளன. அவை உடலில் உள்ள நரம்புகளின் எண்ணிக்கையே ஆகும். நரம்புகள் மூலமே உடல் இன்பம் பெறப்படுகின்றன.

அடுத்து கூரையின் உச்சியில் ஒன்பது கலசங்கள் உள்ளன. கண்கள், காதுகள், மூக்கு துவாரங்கள், வாய், மூத்திர - மல துவாரங்களின் உருவமே இவை ஆகும்.

இந்த கனகசபைக்குள் செல்ல வேண்டும் என்றால் மேல் ஆடையை அகற்றிவிட்டுத் தான் செல்ல வேண்டும். மேல் ஆடை என்பது பற்றுக்கள் - ஆணவம் ஆகியவற்றின் குறியீடுகள். உள்ளே மெய்யுணர்வாகிய நடராஜர் இருக்கிறார்.

அதாவது உடல் மூலம் மனம் அறிவு விழிப்புணர்வு என்ற படிநிலைகளைக் கடந்து ஆன்மீக பயிற்சிகள் மூலமே மெய்யுணர்வை பரிபூர்ணமாக உணர முடியும் என்பதையே சிதம்பர மூலஸ்தானம் காட்டிக் கொடுக்கிறது.

சில கோயில்களில் தங்கம் அல்லாத மற்ற உலோகங்களாலும் கூரைகள்

வேயப்பட்டு உள்ளன. வசதிக்கு ஏற்பவே இவ்வாறு அவை அமைகின்றன. ஆனால் இங்கே ஒரு முக்கிய விஷயத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தங்கம் என்பது உயர்வை மட்டுமே குறிக்கிறது. அங்கே பொருள் மதிப்புள்ள தங்கத்தை மதிப்பிடக்கூடாது. மெய்யுணர்வு என்பது "**சிற்றம்பலம்**" தோ மிக மிக உயர்ந்தது. விலை மதிப்பே இல்லாதது. உடலாகிய கனகசபைக்குள் விழிப்புணர்வு மூலம் இதை அகழ்ந்து தோண்டிக் காண வேண்டும். அதற்கே இந்த அரிதான மனிதப்பிறவி.

நடராஜர் உள்ள இடம் எனப்படும். அதுவே நம்முள் உள்ள விழிப்புணர்வு ஆகும். உடலுக்குள் ஏற்படும் விழிப்புணர்வு மூலமே மெய்யுணர்வினை அறிய முடியும் என்பதையே இது காட்டுகிறது.

தங்கத்தில் கூரை போட்ட சோழ மன்னர்களோ இக்கால பணக்காரர்களோ இக்கருத்தை உணர்ந்து தான் போட்டார்கள் என்பதில் நாம் ஏதும் சொல்வதற்கு இல்லை. கோயில் முழுவதும் பொன்னால் ஒருவர் வேய்ந்தார் என்பதற்காக அவர் மெய்யுணர்வை உணர்ந்தார் என்றும் கூற முடியாது. அதே சமயம் கையில் ஒன்றும் இல்லாத ஒருவன் தன்னுள் தங்கத்தைப் போன்ற அரிதான மெய்யுணர்வை உணர்ந்திருக்கவும் கூடும்.

## நடராஜர் விளக்கம்:

நடராஜர் சிவனின் ஆடும் கோலம் ஆகும். நடராஜர் வடிவங்களிலும் பல வடிவங்கள் உள்ளன. சிதம்பரம் நடராஜ வடிவமே அதிகம் மக்களால் வணங்கப்படுகிறது. அவ்வடிவத்தின் விளக்கத்தைக் காண்போம்.

* முதலில் இவர் மெய்யுணர்வின் அடையாளம் ஆகிறார். எனவே இவருக்கு "**ஆனந்த நடராஜர்**" என்றே பெயர். [சந்தோஷம் - ஆனந்தம் வேறுபாட்டினை மாணவர்கள் உணர்ந்திருக்க வேண்டும்]

* அவரைச் சுற்றி உள்ள வட்டமான வளையம் ப்ரபஞ்சத்தை உணர்த்துகிறது.

* அவ்வளையத்தில் உள்ள தீச்சுடர்கள் ப்ரபஞ்சம் முழுதும் சக்தியால் நிரம்பி உள்ளதை உணர்த்தும்.

* அவரது இடது மேல் கையில் உள்ள தீ - ஒளி சக்தியைச் சுட்டும்.

* அவரது வலது மேல் கையில் உள்ள உடுக்கை - ஒலி சக்தியைச் சுட்டும்.

* அவரது அபயக் கரம் [வலது கீழ்க்கை] - பஞ்ச பூதங்களையும், உடல்-மனம்-அறிவு-விழிப்புணர்வு-மெய்யுணர்வு நிலைகளில் பெறும் பேரின்பத்தையும் சுட்டும்.

* இடது கீழ்க்கை அவரது தூக்கிய இடது பாதத்தை நோக்கி நீண்டு உள்ளது. இது சரணாகதியை உணர்த்துகிறது. அதன் மூலமே நாம் உயர்த்தப்படுகிறோம். [இடது தூக்கிய கால்]

* வலது கால் பாதம் "முயலகன்" என்ற அரக்கனை மிதித்து உள்ளது. அவன் ஆணவத்தின் உருவகம் ஆவான். அவனை உள்ளத்தில் இருந்து எடுக்கும் போது தான் மெய்யுணர்வாகிய நடராஜர் நம்முள் ஆனந்தமாக விளங்குவார் என்ற கருத்தை உணர வேண்டும்.

* அவரது திருத்தமான ஜடாமுடி நெறிப்படுத்தப்பட்ட ஆன்மீக வாழ்க்கையின் அடையாளம் ஆகும்.

* அவரது பரந்து விரிந்துள்ள சடைக்கற்றைகள் திசைகளை உணர்த்தும்.

* அவரது பிறைச்சந்திரன் மனதையும், கங்கை - சதா நம்முள் வழியும் ஆனந்த வெள்ளத்தையும் சுட்டும்.

* அவரது நாகம் யோக சக்தியையும் உணர்த்தும்.

* இவ்விளக்கங்கங்களுக்கு அப்பாற்பட்ட பல ஆழ்ந்த கருத்துக்களையும் தெரிந்து மாணவர்களின் பக்குவத்துக்கு ஏற்ப எடுத்துக் கூறலாம்.